
TAMILTH Madurai 1 Regional_02 223136 HT166128



தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனித் திருவிழா கொடியேற்றத்தின்போது கொடிமரத்துக்கு நடத்தப்பட்ட தீபாராதனை. (வலது) சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளிய அம்மன்.

# தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனி திருவிழா

## கொடியேற்றத்துடன் தொடங்கியது

**இளையான்குடி**

இளையான்குடி அருகே தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனி திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி அருகே தாயமங்கலம் முத்துமாரியம்மன் கோயில் பங்குனித் திருவிழாவை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது. தொடர்ந்து அம்மனுக்கு காப்புக் கட்டியதும், பக்தர்களும் காப்புக் கட்டி விரதத்தைத் தொடங்கினர்.

முன்னதாக, காலையில் நவசக்தி ஹோமம் நடைபெற்றது. நேற்றிரவு சிம்ம வாகனத்தில் அம்மன் எழுந்தருளி வீதி உலா வந்தார்.

விழாநாட்களில்தினமும்இரவில் குதிரை, காமதேனு, அன்னம், பூத வாகனம் உள்ளிட்ட வாகனங்களில் அம்மன் எழுந்தருளி வீதி உலா வருவார். ஏப். 4-ம் தேதி பக்தர்கள் பொங்கல் வைத்து ஆடு, கோழிகளை பலியிட்டு நேர்த்திக் கடன்களைச் செலுத்துவர்.

ஏப். 5-ம் தேதி இரவு 7.10 மணிக்கு மின்னொளி அலங்காரத்துடன் தேரோட்டம் நடைபெறும். ஏப். 6-ம் தேதி காலையில் பக்தர்கள் பால்குடம், அக்னிச் சட்டி எடுத்தல், அலகு குத்துதல் ஆகிய நேர்த்திக் கடன்களைச் செலுத்துவர். அன்று மாலை 5 மணிக்கு ஊஞ்சல் உற்சவம், இரவு 10 மணிக்கு புஷ்பப் பல்லக்கு நடைபெறும்.

ஏப். 7-ம் தேதி இரவு தீர்த்தவாரி நிகழ்ச்சியுடன் விழா நிறைவு பெறுகிறது. விழா ஏற்பாடுகளை கோயில் பரம்பரை அறங்காவலர் மு.வெங்கடேசன் செய்து வருகிறார்.

# யாருக்குமே விசுவாசம் இல்லாதவர் பழனிசாமி

## அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் கருத்து

**அலங்காநல்லூர்**

யாருக்குமே விசுவாசம் இல்லாதவர் பழனிசாமி என்று அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன் தெரிவித்தார்.

தேனி மக்களவைத் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர், உசிலம்பட்டியில் அமமுக வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடந்தது.

இக்கூட்டங்களிலும், பின்னர் செய்தியாளர்களிடமும் டி.டி.வி.தினகரன் பேசியதாவது:

ஜெயலலிதா இறந்ததும் அதிமுக ஆட்சியை தொடர பழனிசாமிக்கு வாய்ப்பு கொடுத்தோம். அவர் ஆட்சியில் அமர்ந்ததும் எங்களைச் சார்ந்தவர்களையும், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் உள்ளிட்ட பலரையும் அதிமுகவில் இருந்து நீக்கினார்.

எனக்கு ஆதரவு அளித்த 18 எம்எல்ஏக்கள் பழனிசாமிக்கு எதிராக அப்போதைய தமிழக ஆளுநரிடம் கோரிக்கை வைத்தனர். அப்போது எங்களுக்கு பாஜக உதவி செய்யவில்லை. அந்த நேரத்தில் பாஜக எங்களுக்கு உதவி செய்திருந்தால் பழனிசாமியை இருக்கும் இடம் தெரியாமல் ஊதி தள்ளி இருப்பேன். அதுமட்டுமின்றி ஓ.பன்னீர் செல்வம் அவரது ஆதரவு எம்எல்ஏக்களுடன் பழனிசாமியுடன் சேராமல் இருந்திருந்தாலும் அவர் இன்று இருக்கும் இடம் தெரியாமல் போயிருப்பார். இன்று ஓ.பன்னீர்செல்வத்தையே அவர் நிராயுதபாணியாக மாற்றிவிட்டார்.

பழனிசாமிக்கு ஆதரவு தெரிவித்த பாஜகவுக்கும் அவர் விசுவாசமாக இல்லை. ஓ.பன்னீர்செல்வத்தையும் அவர் அரவணைத்துச் செல்லவில்லை. அதிமுகவின் ஆணி வேர் யார் என்பது மக்களவைத் தேர்தல் முடிந்தவுடன் தெரியும்.

தேர்தல் முடிந்ததும் அதிமுக யார் வசம் வருகிறது என்பதை பாருங்கள். அதிமுக பல அணிகளாக பிரிய முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமாரும் ஒரு காரணம். எனக்கு விருப்பம் இல்லாவிட்டாலும், பொதுமக்கள் விரும்பி அழைத்ததால் இந்த தொகுதியில் போட்டியிடுகிறேன்.

நம்பிக்கையாக இருந்த சிலர் செய்த சதியால் உங்களை விட்டு சற்று பிரிந்திருக்கும் நிலை ஏற்பட்டது. மீண்டும் உங்களை சந்திக்கும் வாய்ப்பை இறைவன் தந்திருக்கிறான். மீண்டும் மோடிதான் பிரதமர் ஆவார். அதற்கான அறிகுறி பரவலாக தெரிகிறது. மோடி மூலம் தேனி தொகுதிக்கான திட்டங்கள் அனைத்தையும் பெற்றுத் தருவேன்.

பழனிசாமி இங்கு பிரச்சாரத்துக்கு வரும்போது அவரிடம் உங்கள் பிரதமர் வேட்பாளர் யார் என்று கேளுங்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.



உசிலம்பட்டி அருகே நடுப்பட்டியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட தேனி தொகுதி அமமுக வேட்பாளர் டி.டி.வி.தினகரன்.

# ஸ்டாலின் சொல்பவர்தான் பிரதமர்

## தங்க தமிழ்ச்செல்வன் பிரச்சாரம்

**தேனி**

இண்டியா கூட்டணி வெற்றி பெற்றால், முதல்வர் ஸ்டாலின் சொல்பவர்தான் பிரதமராவார், என தேனி தொகுதியில் தங்க தமிழ்ச்செல்வன் பிரச்சாரம் செய்தார்.

தேனி தொகுதி திமுக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன், பெரியகுளம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார். அப்போது அவர், பொம்மையகவுண்டன்பட்டி, அன்னஞ்சி, ஊஞ்சாம்பட்டி, வடபுதுப்பட்டி, லெட்சுமிபுரம், சருத்துப்பட்டி ஆகிய பகுதிகளில் பேசியதாவது:

இண்டியா கூட்டணி வெற்றி பெற்றால், சமையல் சிலிண்டர் ரூ.500-க்கும், பெட்ரோல் லிட்டர் ரூ.75-க்கும், டீசல் ரூ.65-க்கும் வழங்கப்படும். விடுபட்ட மகளிருக்கான உரிமைத் தொகை விரைவில் வழங்கப்படும்.

பாஜக ஆட்சியில் விவசாயக் கடன், கல்விக்கடன் ஆகியவற்றை தள்ளுபடி செய்யவில்லை ஆனால், பெரு முதலாளிகளின் ரூ.2.50 லட்சம் கோடி கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. பாஜக அரசு பணக்காரர்களுக்கானது.

இத்தேர்தலில் இந்தியா கூட்டணிதான் வெற்றிபெறும். அப்போது, ஸ்டாலின் சொல்பவர்தான் பிரதமராக வருவார். இவ்வாறு அவர் பேசினார்.

பெரியகுளம் சட்டப்பேரவை உறுப்பினர் சரவணக்குமார், தேனி நகராட்சித் தலைவர் ரேணுபிரியா, காங்கிரஸ் மாவட்டத் தலைவர் எம்.பி.முருகேசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்டச் செயலாளர் ரபீக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



தேனி அருகே வடபுதுப்பட்டியில் பிரச்சாரத்தில் ஈடுபட்ட திமுக வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வன்.

### மதுரையில் மூதாட்டியிடம் 1000 பவுன் பறித்த வழக்கு

# திண்டுக்கல் பகுதி ஊராட்சி தலைவர் கைது

**மதுரை**

மதுரையில் மூதாட்டியிடம் 1000 பவுன் நகைகள் பறித்த வழக்கில், திண்டுக்கல் பகுதி ஊராட்சித் தலைவர் கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகிலுள்ள குல்லிசெட்டிபட்டியைச் சேர்ந்தவர் ராமுத்தாயி (75). இவரது மூத்த மகன் நடராஜன் வெளிநாட்டில் பொறியாளராக பணிபுரிகிறார். இவரது வீடு மதுரை ஆத்திகுளம் குறிஞ்சி நகரில் உள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக ராமுத்தாயி தனது மகன் நடராஜன் வீட்டில் இருந்து வருகிறார். நடராஜன் சம்பாதித்து அனுப்பிய கோடிக்கணக்கான பணம் மற்றும் நகைகளை, ராமுத்தாயி தனது சகோதரி மகனான குல்லிசெட்டிபட்டி பாலமுருகன் என்ற வைகை பாலன் என்பவர் மூலம் வங்கியில் சேமித்து பாதுகாத்ததாகக் கூறப்படுகிறது. மேலும், மகன் அனுப்பிய பணத்தில் மதுரை, சென்னை போன்ற இடங்களில் சொத்துகளும் வாங்கியுள்ளனர்.

இந்தச் சொத்து மற்றும் பணத்துக்குக் காப்பாளராக இருந்ததாகக் கூறப்படும் பாலமுருகன், அவரது மனைவி ஜெயலட்சுமி இருவரும் சேர்ந்து, ராமுத்தாயை மிரட்டி வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்கிச் சொத்துகளை அவர்களது பெயருக்கு மாற்றியதாகத் தெரிகிறது. இதற்கான ஆவணங்களை ராமுத்தாயி மதுரையில் வைத்திருந்தார்.

இந்நிலையில், ஓரிரு மாதங்களுக்கு முன்பு மதுரைக்கு வந்த பாலமுருகன், அவரது மனைவி ஆகியோர் துப்பாக்கி முனையில் ராமுத்தாயை மிரட்டி, அவரிடம் இருந்த கோடிக்கணக்கான சொத்துக்குரிய ஆவணங்கள், சுமார் 1000 பவுன் தங்க, வைர நகைகளைப் பறித்து தப்பினர்.

இது தொடர்பாக ராமுத்தாய் மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில், பாலமுருகன், அவரது மனைவி மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். பின்னர் இந்த வழக்கு மதுரை மத்திய குற்றப் பிரிவுக்கு மாற்றப்பட்டது.

தொடர்ந்து தலைமறைவாக இருந்த பாலமுருகனை குற்றப்பிரிவு போலீஸார் தேடி வந்தனர். இரண்டு நாட்களுக்கு முன்பு உதவி ஆணையர் வினோதினி தலைமையிலான குற்றப்பிரிவு போலீஸார் மதுரையில் பாலமுருகனை கைது செய்தனர். அவரது மனைவியை தேடி வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட பாலமுருகன் குல்லிசெட்டிபட்டி ஊராட்சித் தலைவராகவும், ஓபிஎஸ் அணியின் திண்டுக்கல் தெற்கு மாவட்டச்செயலாளராகவும் இருக்கிறார்.



பாலமுருகன்

வரி விளம்பரங்கள்

கல்வி

பயிற்சி வகுப்புகள்

BANK PO/CLERK Exam Coaching March-21 (8.30am- 10am) for IBPS SBI - RRB - RBI. -CSB- Near Mambalam Railway Station. Call: 93813 33346

சுய செய்தி

பெயர்மாற்றம்

CHANGE OF NAME

I, Srither Subramanian, S/o. Subramanian, born on 07.01.1963 (Native : Madurai District), residing at No.6, Subramania Siva Street, Nehru Nagar, Bye Pass Road, Palanganatham, MADURAI - 625 003, TAMILNADU shall henceforth be known as SRIDHAR SUBRMANIAN.

Madurai
28.03.2024
- Srither Subramanian

பொது

பொது அறிவிப்பு

அசல் நிலம்/ சொத்து ஆவணம் காணவில்லை

சிவகாசி வட்டம், சிவகாசி - 626 189, சோலை காலனி, P.K.N.ரோடு, க.எண்.1775/1 முகவரியில் வசித்து வரும் திரு.சங்கரலிங்கநாடார் அவர்களின் குமாரர் ஆதார் எண்.5664 0685 0678, சுமார் 81 வயதுடைய S.ஜெயராஜ்பாண்டியன் ஆகிய நான் இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில், சிவகாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் அசல் கிரைய பத்திரம் எண். 1/1892/1983 மற்றும் திருத்தங்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட அசல் கிரைய பத்திரம் எண்.1/243/1984 அசல் கிரைய பத்திரம் எண். 1/692/1986 மற்றும் அசல் கிரைய பத்திரம் எண். 1/750/1987 ஆவணங்கள் 07.03.2024ம் தேதி சிவகாசி பஜாருக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்ற பொழுது தவறி எங்கோ விழுந்துவிட்டது. யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால் எனது 99945 57308 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

S.ஜெயராஜ்பாண்டியன்
1775/1, சோலை காலனி,
P.K.N.ரோடு, சிவகாசி - 626 189



மதுரை வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 'புராஜெக்ட் கான்டெஸ்ட்' போட்டியில் முதல் பரிசு பெற்ற விருதுநகர் காமராஜ் பொறியியல் கல்லூரி மாணவர்கள்.

# வேலம்மாள் பொறியியல் கல்லூரியில் 'இனோபெஸ்டா - 24' போட்டி

**மதுரை**

மதுரை வேலம்மாள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில், 'இனோபெஸ்டா – 24' எனும் தேசிய அளவிலான 'புராஜெக்ட் கான்டெஸ்ட்' நடத்தப்பட்டது.

இதற்கு கல்லூரி முதல்வர் பி.அல்லி தலைமை வகித்தார். கல்லூரி திட்டமிடல் மற்றும் மேம்பாட்டுத் துறை டீன் ஆர்.பெருமாள் ராஜா வரவேற்றார். பல்வேறு கல்வி நிறுவனங்களின் 400-க்கும் மேற்பட்ட பொறியியல் மாணவர்கள் திட்ட அறிக்கைகளைச் சமர்ப்பித்தனர்.

இதில் விருதுநகர் காமராஜ் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் முதல் பரிசாக ரூ.25 ஆயிரம், கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் அகாடமி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள் 2-ம் பரிசாக ரூ.10 ஆயிரம், கோவை ஜான்சன்ஸ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் 3-ம் பரிசாக ரூ.5 ஆயிரம் பெற்றனர். தகவல் தொழில்நுட்பத் துறை தலைவர் ஆர்.கவிதா நன்றி கூறினார்.

## மூதாட்டியிடம் 3 பவுன் திருட்டு

**பெரியகுளம்**

பெரியகுளம் தென்கரை கோட்டை தெருவைச் சேர்ந்தவர் சங்கிலியம்மாள்(62). வீட்டில் இவர் தனியாக இருந்தபோது 45 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் அரசு ஊழியர் போல கையில் பைலுடன் வந்துள்ளார்.

சங்கிலியம்மாள் உள்ளிட்ட குடும்ப உறுப்பினர்கள் விவரங்களை ஃபைலை பார்த்து விசாரணை செய்துள்ளார்.

பின்னர், முதியோர் உதவித் தொகை வழங்க விசாரணைக்கு அதிகாரிகள் வந்து கொண்டு இருக்கின்றனர். ஆகவே, கழுத்தில் உள்ள சங்கிலியை கழற்றி தருமாறு கூறியுள்ளார். இதை நம்பிய சங்கிலியம்மாள் தனது 3 பவுன் சங்கிலியை கழற்றி தந்துள்ளார். வீட்டின் அருகேயுள்ள கடை முன் அமர வைத்து விட்டு சென்றவர் திரும்பி வரவில்லை. இதுகுறித்து புகாரின்பேரில், தென்கரை காவல் சார்பு ஆய்வாளர் கர்ணன் விசாரிக்கிறார்.

## நகரில் நடப்பவை

**மதுரை**

- திருப்பரங்குன்றம் சுப்பிரமணிய சுவாமி கோயில்: பங்குனி திருவிழா தீர்த்த சுபம், காலை 6.
- கீதா பவனம்: 125-வது ஆண்டு ஜெயந்திவிழா, காமராஜர் சாலை, கீழவாசல், பொருள்- அன்றாட வாழ்க்கையில் முக்குணங்கள், மாலை 6.30.

# தேர்தல் அலுவலர்கள் நடுநிலையாக செயல்பட வேண்டும்

## மதுரையில் பொது பார்வையாளர் அறிவுறுத்தல்

**மதுரை**

மதுரை மாவட்டத்தில் தேர்தல் வாக்குப் பதிவு முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான சங்கீதா தலைமை வகித்தார். மதுரை தொகுதிக்கான தேர்தல் பொதுப் பார்வையாளர் ராஜேஷ் குமார் யாதவ், காவல் துறை பார்வையாளர் ரோகன் பி.கனாய் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தேர்தல் பொதுப் பார்வையாளர் பேசியதாவது: தேர்தல் ஆணையம் வழங்கியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி, பாரபட்சம் இன்றி நடுநிலையாக செயல்படுவதை அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டும். தேர்தல் தொடர்பான புகார், கோரிக்கைகளை உடனுக்குடன் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

rakesh.sridhar@hindutamil.co.in

UJJIVAN SMALL FINANCE BANK

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
**கிளை அலுவலகம்:** கதவு எண்.24, பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், புதிய அக்ரஹாரம், நேருஜி நகர், திண்டுக்கல் - 624001

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 22.03.2024 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித் தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1607210040000012<br>1. உத்திரன் ஆண்டி<br>2. காவேரி | (i) 28.05.2022<br>(ii) 16.08.2022 அன்றுள்ளபடி ₹ 3,18,057/- (ரூபாய் மூன்று லட்சத்து பதினெட்டாயிரத்து ஐம்பத்து ஏழு மட்டும்)<br>(ii) 08.12.2022 | ₹ 4,39,998.01 (ரூபாய் நான்கு லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று எட்டு மற்றும் பைசா ஒன்று மட்டும்) | ₹ 5,42,200/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து இருநூறு மட்டும்) | ₹ 54,220/- (ரூபாய் ஐம்பத்து நான்காயிரத்து இருநூற்று இருபது மட்டும்) |

**சொத்து விவரம் :** 1. திண்டுக்கல் பதிவு மாவட்டம், அய்யம்பாளையம் சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட **சர்வே எண்.789/5, மனை எண்.70, சேவகம்பட்டி கிராமம், நிலகோட்டை தாலுகா என்னும் முகவரியில் 801¼ சதுர அடி, 74.47 சதுர மீட்டர் வீட்டு நிலம்,** அதனுடன் அனைத்து இதர வழக்கமான வழிப்பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் அனைத்த இதர உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 27 ¾ அடி தெற்கு திசையில் 26.4 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 33 அடி, கிழக்கு திசையில் 26 ¼ அடி, மொத்தம் 801¼ **சதுர அடி,** 74.47 **சதுர மீட்டர்.** எல்லைகள்: வடக்கு: பழனிசாமி சொத்து, மேற்கு: ஜெயராம்-ன் மனை எண்.69, தெற்கு: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கு: மனை எண்.71 - 2வது ஐட்டம் சொத்து.

2. திண்டுக்கல் பதிவு மாவட்டம், அய்யம்பாளையம் சார்பதிவு அலுவலக எல்லைக்குட்பட்ட **சர்வே எண்.789/5, மனை எண்.71, சேவகம்பட்டி கிராமம், நிலகோட்டை தாலுகா என்னும் முகவரியில் 770¼ சதுர அடி, 71.58 சதுர மீட்டர் நிலம்,** அதனுடன் அனைத்து இதர வழக்கமான வழிப்பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் அனைத்த இதர உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கு திசையில் 26¼ அடி தெற்கு திசையில் 32 அடி, வடக்கு தெற்காக மேற்கு திசையில் 26¼ அடி, கிழக்கு திசையில் 26 ¼ அடி, மொத்தம் **770¼ சதுர அடி, 71.58 சதுர மீட்டர்.** எல்லைகள்: வடக்கு: பழனிசாமி சொத்து, மேற்கு : ஷெட்யூல் சொத்தில் குறிப்பிட்டுள்ள 1வது ஐட்டம் மனை எண்.70 , தெற்கு: கிழக்கு மேற்கு தெரு, கிழக்கு: சுப்பையா சொத்து.

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 24.04.2024 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: **23.04.2024** அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் **22.04.2024** காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி :
Mr. ஞானவேல் - 98410 17131 Mr.பிரசன்னா - 96261 56568, Mr.R.கிருபாகர் - 94455 08743, Mr.புஷ்பகாந்த் - 98431 14222

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr. பிரபாகரன் (Mobile No. 7418281709)**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 30.03.2024
இடம்: பெங்களூரு

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

# முதல்வர் உட்பட அனைவரும் பொய் பேசுகின்றனர்

## நத்தம் ஆர்.விசுவநாதன் குற்றச்சாட்டு

**பழநி**

முதல்வர் உட்பட திமுகவினர் அனைவரும் பொய் பேசுகின்றனர் என முன்னாள் அமைச்சர் நத்தம் ஆர்.விசுவநாதன் குற்றம் சாட்டினார்.

பழநியில் அதிமுக கூட்டணி கட்சி சார்பில் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் எஸ்டிபிஐ கட்சி வேட்பாளர் முகமது முபாரக்கை ஆதரித்து, அதிமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான நத்தம் ஆர்.விசுவநாதன் பேசியதாவது:

அதிமுக ஆட்சியில் இருந்த தாலிக்கு தங்கம் உட்பட பல திட்டங்களை திமுக ஆட்சியில் முடக்கியுள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின், அவரது மகன் உதயநிதி உட்பட அமைச்சர்கள், திமுக எம்எல்ஏக்கள் அனைவரும் வாயைத் திறந்தாலே பொய்தான் பேசுகின்றனர். இவ்வாறு அவர் பேசினார்.

அதிமுக மாநில பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன் பேசுகையில், பெட்ரோல், டீசல், காஸ் விலையை குறைப்போம் என்று பொய் வாக்குறுதிகளை கொடுத்து மக்களை திமுக ஏமாற்ற நினைக்கிறது என்று பேசினார்.



ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய முன்னாள் அமைச்சர் நத்தம் ஆர்.விசுவநாதன்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Sri R.Barathan, Indian, Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: K. Asokan (Editor responsible for selection of news under the PRB Act).

MA-MA